2017 ஜூலை 12]

185—

மீன் பதனிடும் பூங்கா

***22313—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், குறும்பனை பகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், குறும்பனை பகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மேற்குக் கடற்கரைப் பகுதியில் வள்ளவிளை, நீரோடித் துறை, தூத்தூர், சின்னத் துறை, இரயுமன்துறை, மிடாலம், குறும்பனை என கிட்டத்தட்ட 16 மீனவ கடலோரக் கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கடலோரக் கிராமங்களில் இருக்கின்ற மீனவ சமுதாய மக்கள் கடலை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதில் திறமையானவர்கள். இந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் பெரிய படகுகளில் சென்று, கிட்டத்தட்ட 2, 3 மாத காலமாக கடலில் இருந்து பிடிக்கின்ற மீன்கள் 15 டன், 20 டன்னுக்கு மேலாக இருக்கின்றன. இது 25 இலட்சம் ரூபாய்க்குமேல் விற்கக்கூடிய மீன்கள். ஆகவே, சில நேரங்களில் இந்த மீன்களை உள்ளூர் சந்தையில் விற்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதிகப்படியான மீன்களை பிடிக்கின்றபோது அந்த மீன்களுக்கு ஏற்ற விலை கிடைப்பதில்லை. ஆகவே, இந்த மீன்களைப் பதனிடுவதற்கு அங்கே மீன் பதனிடும் பூங்கா அமைத்து,* storage *வசதியும் செய்து கொடுத்தால், அந்த*

மீன்களுக்குரிய விலையும் கிடைக்கும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் எங்களுடைய மாவட்டத்தில் மீன் வளம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, எங்களுடைய மீனவர்கள்கூட இன்றைக்கு வெளிநாடுகளில், வெளி மாநிலங்களில் சென்று மீன்களை விற்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, உள்ளூரிலே இப்படிப்பட்ட மீன் பதனிடும் பூங்காவை அமைத்துத் தந்தால், இன்றைக்கு அன்னியச் செலாவணியினுடைய மதிப்பும் உயரும்; அதுபோல் எங்களுடைய பொருளாதாரமும் வளர்ச்சி பெறும். அதற்கான proposal இருக்கிறது என்று நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆகையால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற கடலோரக் கிராமங்களில் மீன் பதனிடும் பூங்கா அமைத்துத் தந்தால் மக்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்ததாக அமையும். எனவே, அதை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மீன் உணவு அதிகமான அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்ற உயர்ந்த மனப்பான்மையோடுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13 கடலோர மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே முதல் கட்டமாக கன்னியாகுமரி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, கடலூர் போன்ற மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டு, அதிலே இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மயிலாடி என்ற கிராமத்தில் 7 ஏக்கர் 31 செண்ட் நிலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. Chennai–ஐச் சேர்ந்த G.M.K. Sea Food–க்கு, நிலத்தை lease–ன் அடிப்படையிலே கொடுத்திருக்கின்றோம். அந்தப் பணி நடைபெற்று வருகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த குறும்பனை பகுதியானது, மயிலாடியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. எனவே, அவர்கள் மயிலாடியில் அமைக்கப்படும் மீன் பதனிடும் பூங்காவைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, கடல் பொருள் உணவு ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 4,500

2017 ஜுலை 12]

கோடி ரூபாய் தற்போது அன்னியச் செலாவணியாக நமக்குக் கிடைக்கின்றது. அதனை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய ஆணையின் பேரிலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகளிலே ஏறக்குறைய 6,000 கோடி ரூபாயைத் தாண்டுகின்ற அளவிற்கு இருக்கும். ஆந்திராவிலே Public–Private Partnership அடிப்படையிலே சில மீன் பதனிடும் பூங்காக்கள் (Fish Processing Parks) அமைப்பதற்கு வேண்டிய அளவிற்கு உதவி செய்கின்றார்கள். எனவே, அதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, என்னென்ன சலுகைகள் அளிக்கப்படும் என்பது குறித்தெல்லாம் வருங்காலத்தில் அறிவிக்கப்படும் என்ற அந்தத் தகவலையும் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே நிலம் இல்லை. அதுதான் பிரச்சினை. ஏழு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அரசு நிலம் இருந்தால் அதை நாம் கொடுத்து, அங்கே PPP–Public–Private Partnership முறையிலேகூட அதை ஆரம்பிப்பதற்கு வகை செய்யலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட சொந்தமாக Fish Processing Park ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தாரென்றால், நிச்சயமாக அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்யும். ஏற்கெனவே, உறுப்பினருடைய தொகுதியிலே தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 90 கோடி ரூபாய் ஒதுக்கி, உத்தரவிட்டார்கள். கிட்டத்தட்ட 734 படகுகள் அங்கே மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, அங்கு ஆரம்பிப்பதற்கு நல்லதொரு வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், நிலம்தான் இல்லை. நிலத்தை வாங்கி, முழுமையான அளவிற்கு மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் அல்லது உறுப்பினர்களுக்கு தெரிந்த நண்பர்களே கொண்டு வந்தாலும்கூட அரசு அவர்களுக்கு உதவியாக இருக்கும்; அல்லது உறுப்பினரே அமைத்தாலும்கூட அவருக்கும்கூட உதவி செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் கூறியதுபோல கிள்ளியூர் தொகுதியில் மயிலாடி பகுதி என்பது

நீரோடித்துறையிலிருந்து கிட்டத்தட்ட 45 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மேற்குக் கடற்கரையான அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 16 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கரையோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து வளாகங்களில், P.W.D.–க்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அதை ஆய்வு செய்து, வரக்கூடிய காலங்களில் நீங்கள் அந்த மீன் பதனிடும் பூங்காவை அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கண்ணுக்குத் தெரிந்த சில இடங்களிலே பொதுப் பணித் துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இருப்பதாகச் சொல்கின்றார். அதை பூதக் கண்ணாடி கொண்டு ஆராய்ந்து பார்த்து, உண்மையிலேயே நிலம் இருந்தால், நிச்சயமாக அங்கே மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைத் தவிர ஒரு யோசனை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சேர்ந்து partnership அடிப்படையிலேகூட செய்யலாம். நிச்சயமாக அரசு அதற்கு உறுதுணையாக இருக்கும்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

186—

கலைக் கல்லூரிக்கு கட்டடம்

*4375—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை–ஆனைகுளம் பகுதியிலுள்ள கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?